# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.172/2019

பிரதிவாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.முத்துகிருஷ்ணவேணி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

பெயர் ராமமூர்த்தி பி.வா.சா.–1

த/பெ. வீரையா

கிராமம் தொழில் --

தாலுகா அருப்புக்கோட்டை வயது 71

---

முதல் விசாரணை 16–03–2026.

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) 28.10.1993ம் தேதிய கந்தசாமி நாயக்கர் ஆண்டாளம்மாள் மற்றும் பிரேமா ஆகிய இருவருக்கும் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆவண எண்.2075/1993 இணையதள நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) 21.08.1996ம் தேதிய ஆண்டாளம்மாள் மற்றும் பிரேமா ஆகிய இருவரும் சேர்ந்து சகுந்தலா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆவண எண்.2707/1996 இணையதள நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) 30.04.2007 ம் தேதிய சகுந்தலா பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆவண எண்.1877/2007 இணையதள நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(4) 25.10.2019 ம் தேதிய பிரதிவாதி பெயரில் உள்ள T.S.No.105 டவுண்சர்வே பதிவேடு இணையதள நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(5) 14.10.2025 ம் தேதிய சொத்துவரி ரசீது அசல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(6) 14.10.2025 ம் தேதிய குடிநீர் கட்டண ரசீது அசல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(7) 21.01.2026 ம் தேதிய மின்கட்டண ரசீது அசல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.16 15:00:27 +0530